**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 1 (LW1 )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2024

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

எ.த.கு.வி:

| | |
|---|---|
| கேள்வி | சாட்சி பட்டியலில் உள்ள 2 முதல் 6 , 8 முதல் 22 வரையில் உள்ளவர்கள் உங்கள் உறவினர் மற்றும் ஒரே தெருவில் வசிப்பவர்கள் என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | தேனி , மதுரை சாலை இரண்டு வழி உடைய அகலமான சாலை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அரசு மேல்நிலைப்பள்ளியின் அருகில் தான் சம்பவம் நடந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த சாலையில் போலீஸ் தடுப்பு உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆண்டிபட்டி பஸ் ஸ்டாண்ட அருகில் தான் காவல் நிலையம் உள்ளது ? |
| பதில் | ஆம். 500 மீட்டர் தொலைவில் உள்ளது. |

| | |
|---|---|
| | .2. |
| கேள்வி | மதுரையில் வரும் போது ராஜகோபாலன் பிரிவில் தடுப்பு உள்ளது என்றால்? |
| பதில் | நாங்கள் அங்கு செல்லவில்லை. பொதுவாக இருக்கும். |
| கேள்வி | அரசு மேல்நிலைபள்ளி எதிரில் அந்த பள்ளிக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவம் தினம் அன்று மகா சிவராத்திரி தினம் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அதனால் அன்றைய தினம் சம்பவ இட சாலையில் நிறைய வாகன போக்குவரத்து இருந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | முதல் விசாரணையில் டீ கடையில் இருந்த சங்கதியை போலீசாரிடம் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவம் நடந்த ரோடு வளைவு நிறைய இருக்கும் என்றால்? |
| பதில் | அவ்வளவாக இருக்காது. |
| கேள்வி | சம்பவம் நடந்த இடத்தில் காலை நேரம் என்பதால் அப்போது கடைகள் ஏதும் திறக்கவில்லை என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | சம்பவம் நடந்தவுடன் போலீசார் வந்தார்களா என்றால்? |
| பதில் | வந்தார்கள். |
| கேள்வி | ஆம்புலன்ஸில் எத்தனை பேர் சென்றீர்கள் என்றால்? |
| பதில் | நான் மட்டும் தான் இருந்தேன். |
| கேள்வி | க.விலக்கு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் ? |
| பதில் | 10 நிமடங்கள். |
| கேள்வி | காவல் நிலையத்திற்கு யார் யார், வந்தார்கள்? |
| பதில் | நானும், நாகராஜ் என்பவரும். |
| கேள்வி | உங்களுக்கு எழுத ,படிக்க தெரியுமா என்றால்? |
| பதில் | ஓரளவு தெரியும். |
| கேள்வி | புகாரை நீங்கள் எங்கு வைத்து எழுதீனிர்கள்? |
| பதில் | காவல் நிலையத்தில் |
| கேள்வி | நீங்கள் எழுதும் போது பக்கத்தில் காவலர்கள் இருந்தார்களா என்றால்? |

| | |
|---|---|
| | .3. |
| பதில் | ஆம். |
| கேள்வி | அவர்களும் எப்படி நடந்தது என்று சொன்னார்களா ? |
| பதில் | எங்களிடம் கேட்டார்கள் நாங்கள் சொன்னோம். எப்படி , எங்கு எங்கு நடந்தது என்று சொன்னோம். |
| கேள்வி | புகாரில் உங்களை தவிர வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் போனதாக சொல்லும் ஆட்டோவின் நம்பரை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | நான் சொல்லவில்லை. போலீசார் எழுதினார்கள். |
| கேள்வி | சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் அரசு பேருந்தில் வந்த பயணிகளுக்கு விபத்து சம்பந்தமாக காயங்கள் ஏதும் ஏற்பட்டதா என்றால்? |
| பதில் | நான் பார்க்கவில்லை. |
| கேள்வி | உங்களை போலீசார் விசாரிக்கும் போதோ, அல்லது உங்களின் புகாரிலோ அந்த பேருந்திற்கு விபத்து சம்பந்தமாக என்ன பாதிப்பு இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | நான் பதற்றத்தில் இருந்தேன். |
| கேள்வி | சம்பவ இடத்தில் நீங்கள் இல்லை என்பதாலும், சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இந்த விபத்து சம்பந்தமாக இழப்பீடு பெறுவதற்காக தாக்கல் செய்யபட்ட வழக்கிற்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய் சாட்சியம் சொல்கீறிர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் போனதாக சொல்லும் ஷேர் ஆட்டோ ஒரு மாவட்டத்திற்குள் மட்டும் இயங்க கூடியது என்றாலும், ஒரு மாவட்டத்தை விட்டு ஒரு மாவட்டத்திற்கு செல்ல முடியாது என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | 2 வது சென்றதாக ஆட்டோவில் யார் , யார் சென்றார்கள் என்றால்? |
| பதில் | நான், மகன் சுரேஷ், மருமகள் பாண்டியம்மாள், பேத்தி திவ்யா சென்றோம். |
| கேள்வி | விபத்து ஏற்படுத்திய ஆட்டோ ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால்? |
| பதில் | சரியல்ல. |

| | |
|---|---|
| | .4. |
| கேள்வி | ஆகையால் இழப்பீடு கேட்க முடியாது என்பதால் அரசு பேருந்து மீது பொய்யாக குற்ற புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் சொல்வது போல் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேருக்கு மோதிக் கொண்டது என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | அப்படி மோதி இருந்தால் வேகத்தின் காரணமாக பேருந்திற்கு அதிக சேதம் ஏற்பட்டு இருக்கும் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 1வது எதிரி முறையாக சாலை விதிகளை கடைபிடித்து தான் வாகனத்தை இயக்கினார் என்றால் |
| பதில் | சரியல்ல. |
| 2வது எ.த.குவி | |
| கேள்வி | பிராதுகாரன்பட்டி விளக்கில் உள்ள மெயின் ரோட்டில் ஒரு பெட்ரோல் பங்கில் இரண்டு ஆட்டோக்களுக்கும் பெட்ரோல் நிரப்பட்டது என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | முதல் ஆட்டோவை ராமு என்ற 2வது எதிரி டீ சாப்பிட்ட உடன் முதலில் எடுத்து சென்று விட்டார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அதன் பிறகு 2 வது ஆட்டோ எப்போது புறப்பட்டது என்றால்? |
| பதில் | 8 முதல் 10 நிமிடங்களுக்கு பிறகு. |
| கேள்வி | 2வது ஆட்டோவில் நீங்கள் சொன்ன நபர்களை தவிர வேறு யாரும் செல்லவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் சம்பவ இடத்திற்கு 10 நிமிடங்கள் கழித்து தான் சென்றீர்கள் என்றால்? |
| பதில் | சம்பவம் நடந்த உடனே நாங்கள் இறங்கி சென்று விட்டோம். |
| கேள்வி | சம்பவ இடத்தில் இருந்து ஆம்பு லன்ஸில் பாதிக்கபட்டவர்களை ஏற்றி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவ இடத்திற்கு க.விலக்கு மருத்துவமனைக்கு போக வேண்டும் என்றால் ஆண்டிபட்டி காவல் நிலையத்தை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால்? |
| பதில் | இடையில் தான் இருக்கிறது. |

| | |
|---|---|
| | .5. |
| கேள்வி | புகார் கொடுத்திட்டு மருத்துவமனைக்கு போக வேண்டும் என்ற எண்ணம் இருந்ததா , இல்லையா என்றால்? |
| பதில் | இருந்தது ஆனால் சூழ்நிலை அப்படி இல்லை. |
| கேள்வி | புகாரில் உள்ள எழுத்து யாருக்கு சொந்தமானது என்றால்? |
| பதில் | நாகராஜ். |

மறு விசாரணை இல்லை:

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.08.06 17:42:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.08.2024.

**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுரேஷ் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | முருகன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2024

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

1 வது எ.த.கு.வி:

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் என்ன வேலை பார்க்கீறர்கள் , என்ன படித்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | நான் 4ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஜவுளி கடையில் விற்பனையாளராக உள்ளேன். |
| கேள்வி | நீங்கள் அடிக்கடி மதுரை , தேனி ஆண்டிபட்டி வழியாக செல்லும் சாலை உங்களுக்கு நன்கு தெரியும் என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | சம்பவம் நடந்த இடத்திற்கு தள்ளி கிழக்கு புறமாக ஒரு காவல் சோதனை சாவடி உண்டு என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | நீங்கள் போலீசார் விசாரணையில் அரசு பேருந்திற்கு எதாவது சேதம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | போலீசார் என்னை விசாரிக்கவில்லை. |

| | |
|---|---|
| | .2. |
| கேள்வி | நீங்கள் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக இந்த வழக்கில் சேர்க்கபட்டுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |

மறு விசாரணை இல்லை:

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.08.06 17:42:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.08.2024.